**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) எயிட்ஸ் கூறின் சுற்று 9 - 2015**

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) எயிட்ஸ் கூறின் சுற்று 9 இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஒஎஸ்எல்) மற்றும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவிற்கு எதிரான உலக நிதியத்திற்குமிடையில் (ஜீஎவ்ஏரீஎம்) கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய எஸ்ஆர்எல்-எஸ்11-ஜீ13-எச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின்படி, முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலுக்கு பொறுப்பாக உள்ளது. இலங்கையில் எச்ஐவி நோய்த்தாக்கத்தினை குறைந்த மட்டத்தில் பேணுதல் மற்றும் எச்ஐவி தொற்றுக்குள்ளாகிய மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். மானிய உடன்படிக்கையின்படி, எச்ஐவி / எயிட்ஸ் கட்டுப்பாட்டு செயற்திட்டத்தின் 06 மற்றும் 09 ஆம் சுற்றுக்களின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் முறையே ஐ.அ.டொலர் 1,300,923 மற்றும் ஐ.அ.டொலர் 4,956,930 ஆகும். அத்துடன், மொத்த தொகையும் ஜீஎவ்ஏரீஎம் ஆல் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்ட எயிற்ஸ் கூறின் சுற்று 06 தனது நடவடிக்கைகளை 2008 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2010 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்ட எயிற்ஸ் கூறின் சுற்று 09 தனது நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 31 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான

நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம், செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நிதியளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழான பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்றும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. அபிப்பிராயம்

இதுவரையிலான எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்.

(அ) செயற்திட்டம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களிலுள்ள தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய அறிக்கைகளிலுள்ள தகவல்களுடன் இணங்குகின்றன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3 நிதிக்கூற்றுக்கள்

### 3.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ஐ.அ.டொலர் 1,121,550 இற்கு சமனான ரூபா 155,820,264 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 635,529,391 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2015 | | 2014 | | |
| | ஐ.அ. டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 42,733 | 6,296,246 | 11,143 | 1,460,240 | 69,990,787 |
| எச்ஐவி/எயிட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 1,078,817 | 149,524,018 | 1,008,630 | 131,686,724 | 565,538,604 |
| | **1,121,550** | **155,820,264** | **1,019,773** | **133,146,964** | **635,529,391** |

### 3.2 காசுப் பாய்ச்சல் கூற்று

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி காசுப் பாய்ச்சல் கூற்றின் நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| வெளிநாட்டு உதவி- மானியம் (வாக்குப்பண பேரேடு - 13) மூலம் பெறப்பட்ட காசு | 396,825 | 55,000,000 | 612,745 | 80,000,000 |
| வெளிநாட்டு உதவிகளுடன் தொடர்புபட்ட உள்நாட்டு நிதிகள் (வாக்குப்பண பேரேடு- 17) | 79,365 | 11,000,000 | 38,297 | 5,000,000 |
| உலக நிதியத்திடமிருந்தான நேரடி நிதியளிப்பு | 306,020 | 42,414,408 | 70,070 | 9,148,367 |
| கேள்வி மற்றும் ஏனைய வருமானங்களிலிருந்து பெறப்பட்ட காசு | - | - | 161 | 21,000 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் | (1,078,816) | (149,524,018) | (697,819) | (91,107,262) |
| ஆண்டிற்கான மிகை / (பற்றாக்குறை) | (296,606) | (41,109,610) | 23,454 | 3,062,105 |
| **சீராக்கல்கள்** | | | | |
| பெறுமானத்தேய்வு | 82,328 | 11,410,639 | - | - |
| அட்டுறு மற்றும் சென்மதிகள் | 272,438 | 37,759,852 | - | - |
| நாணயமாற்று நட்டம் / இலாபம் | (3,450) | - | (88) | - |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பய்ச்சல்** | **54,710** | **8,060,881** | **23,366** | **3,062,105** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்கள் | (42,733) | (6,296,246) | (11,143) | (1,460,240) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(42,733)** | **(6,296,246)** | **(11,143)** | **(1,460,240)** |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| திறைசேரிக்கு மீளளிக்கப்பட்ட காசு | (11,977) | (1,764,635) | (12,223) | (1,601,865) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(11,977)** | **(1,764,635)** | **(12,223)** | **(1,601,865)** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு / (தேறிய குறைவு)** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** | **இல்லை** |

## 4. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 453 | தனிநபர் வேதனங்களுக்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 | 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 69.99 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) தாபனவிதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 11.2 ஆம் உறுப்புரை | வாழ்க்கை செலவு படியினை கணிப்பிடும் போது உத்தியோகத்தர்களின் சம்பளமற்ற விடுமுறைகள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) உலக நிதியத்தின் 3 (vi) ஆம் இலக்க உசாத்துணை விதி | 06 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 8.65 மில்லியன் பெறுமதியான கொடுப்பனவின் உறுதிச்சீட்டுக்கள் அவற்றுக்கான மூல ஆவணங்களின் மூலப்படிவங்களுக்கு பதிலாக பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்கள் 5.4.11 ஆம் பந்தி | பெறுமதி சேர் வரி செலுத்தல்கள் தொடர்பான விபரங்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்களுக்கு 98 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 5.95 மில்லியன் தொகையான பெறுமதிசேர் வரி தொடர்பில் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணனி மற்றும் தொடர்புடைய மென்பொருள்களுக்கான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 4.3.2 ஆம் பந்தி | விதவைகள் / தபுதாரர் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே பங்களித்திருந்த 09 உத்தியோகத்தர்களுக்காக, 2015 சனவரி 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ரூபா 1.19 மில்லியன் திருப்பப்பட்டிருந்தது. |

## 5. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2015 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின பிரகாரம் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2015 ஆண்டிற்கான ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் |
| ஜீஎவ்ஏரீஎம் | 4.96 | 629.46 | 1.04 | 0.70 | 97.41 | 0.70 | 97.19 | 3.30 | 431.34 |
| | **4.96** | **629.46** | **1.04** | **0.70** | **97.41** | **0.70** | **97.19** | **3.30** | **431.34** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டதிட்டத்தால் 2011 சனவரி 01 முதல் 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கென ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொலர் 4.96 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 67 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

ஐ.அ.டொலர் 3.3 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ஐ.அ.டொலர் 11,977 இற்கு சமனான ரூபா 1.76 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் பொது திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக நிலுவையாகவிருந்த சென்மதிகள் ரூபா 37.76 மில்லியன்களாகும்.

(ஆ) மருந்துகளை கொள்வனவு செய்யும் நோக்கத்துடன் ஒதுக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 225,621 உள்டங்கலாக 27 நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 83.81 மில்லியனிற்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 659,955 தொகை மீளாய்வாண்டில் குறித்த நோக்கத்திற்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் 18 பாதீட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கென ஒதுக்கப்பட்ட ரூபா 29.52 மில்லியனுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 232,263 ஒதுக்கீட்டில், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கீட்டில் 29 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 9.45 மில்லியனுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 68,226 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளரினால் அளிக்கப்பட்ட விளக்கத்திற்கமைய, உலக நிதியத்திடமிருந்தான நிதிகளின் மீளளிப்பில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, செயற்திட்ட நடவடிக்கைகளின் செயலாற்றல் மந்தமான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும் 06 நடவடிக்கைகளின் அமுலாக்கலுக்கென செலவிடப்பட்ட ரூபா 29.88 மில்லியனுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 215,205 தொகை மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 <u>பௌதீக முன்னேற்றம்</u>**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) செயற்திட்டத்தால் அரச சார்பற்ற நிறுவனமொன்றினூடாக பெண் பாலியல் தொழிலாளர்கள், ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள், போதை வஸ்து பாவனையாளர்கள் மற்றும் கரையோர பாலியல் தொழிலாளர்கள் போன்றோருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சுகாதார அமைச்சினால் 2013 ஆம் ஆண்டு பிரதான பெறுநர் - 01 ஆக அரச சார்பற்ற நிறுவனமொன்றுடன், பிரதான பெறுநர் - 02 ஆக மேற்குறித்த நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு நோக்கத்திற்காக புரிந்துணர்விற்கான நினைவுக்குறிப்பொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், புரிந்துணர்வுக்கான நினைவுக்குறிப்பின் பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததன் விளைவொன்றாக, அரச சார்பற்ற நிறுவனத்தின் செயலாற்றலினை மதிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது சிறைக்கைதிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக சிறைக்கைதிகளின் குழுவொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், மீளாண்வாண்டில் சிறைக்கைதிகளின் குழுக்களுக்கு கல்வியிலாளர் குழுக்களாக பணிபுரிவதற்காக ரூபா 566, 310 செலவில் பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சிறைக்கைதிகளின் மொத்த சனத்தொகையில் 1,350 கல்வியிளலாளர்கள் ஆலோசனைச் சேவைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 765 கல்வியாளர்கள் மாத்திரமே பயிற்சியளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனர்.

(இ) 2013 மே மாதம் ஆலோசனையாளரால் சிறைச்சாலை சமூகத்திற்கான எச்.ஐ.வீ எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதன் மீதான ஒரு வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தபோதிலும், அவற்றுள் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் முறையான பொறிமுறைகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. சர்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது ரூபா 2.48 மில்லியன் கிரயத்தில் 07 குளிர்சாதனப்பெட்டிகளை கொள்வனவு செய்து வழங்கப்பட்ட சொத்துக்கள் பொருள் குறிப்புரைகளுடன் இணங்குகின்றனவா என உறுதிப்படுத்தாமல் நாடளாவிய ரீதியில் இரசாயன ஆய்வுகூடங்களுக்கு நேரடியாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுத்திருந்தது. வழங்குனரால் வழங்கப்பட்ட மூல விலைப்பட்டியலானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டம் ரூபா 6.15 மில்லியன் கிரயத்தில் 1,000,000 ஆணுறைகளை உள்ளூர் சந்தையில் அவசர கொள்வனவுகளாக கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறெனினும், இருப்பு பதிவுகள் முறையாக பேணப்படாத காரணத்தால் கையிருப்பிலுள்ள சரக்கினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(7) நிதிக் கட்டுப்பாட்டிலான விடயங்கள்**

கணக்காய்வின் போது பின்வரும் நலிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநபரொருவருக்கு 2010 ஏப்ரல் 10 மற்றும் 2010 ஆகஸ்ட் 19 ஆந் திகதிகளில் வழங்கப்பட்ட முறையே ரூபா 551,250 மற்றும் ரூபா 88,146 முற்பணங்கள் 2015 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொருட்கள் சேவைகளின் வழங்களுக்கான ஒப்பந்தம் 2016 மார்ச் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தால் மருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய இருப்புக்களின் முகாமைத்துவம் மீதான கட்டுப்பாடுகள் திருப்திகரமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. பின்வரும் விடயங்கள் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டன.

(i). 2015 திசெம்பர் ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் காலாவதியான எச்.ஐ.வீ / எயிட்ஸ் பாதிப்பிற்குள்ளானோருக்காக பரிந்துரைக்கப்பட்ட 4,620 மாத்திரைகள், 2016 பெப்ரவரி வரையிலும் அவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மருந்துக் களஞ்சியங்களில் இருந்தது.

(ii). 2015 ஆம் ஆண்டில் முறையே 28 மற்றும் 02 சந்தரப்பங்களில் வழங்கப்பட்ட 198,160 ஆணுறைகள் மற்றும் 3,400 லுப்ரிகன்ட்ஸ் தொடர்பில் 17 பால்வினை நோய் மருத்துவமனைகளிடமிருந்து ஒப்புரைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

மேலும் குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரச சாரபற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 1,668,304 ஆணுறைகள் மற்றும் 184,800 லுப்ரிகன்ட்ஸ்காகவும் தேசிய எஸ்ரீடி / எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தால் நடாத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக விநியோகிக்கப்பட்ட 9,656 ஆணுறைகளுக்காகவும் முறையாக அங்கீகரிக்கப்பட்ட வழங்கல் கட்டளைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்பாட்டுக் குழுக் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புரையின் பிரகாரம், செயற்பாட்டு குழுவின் பரிந்துரைக்கமைய செயற்திட்டத்தால் நேர அடிப்படையிலான செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான கொடுக்கல் வாங்கல்கள் உரிய அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை.